# நிறுத்திவைத்தல் வரி (நி.வை.வ - WHT) மற்றும் முற்பண வருமான வரி (மு.வ.வ. - AIT) என்பவற்றின் வருடாந்தக்கூற்றை பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டி

# 2021/2022 ஆம் வரிமதிப்பீட்டாண்டு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (உள்நாட்டு இறைவரிச் சட்டம்) ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு **நிறுத்திவைத்தல் முகவரும், 2022, ஏப்பிரல் 30 ஆம் திகதிக்கு முன்னர்** 2021/2022 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான, அட்டவணைகளுடன் வருடாந்தக் கூற்றினை **(படிவம் இல. Asmt WHT_001_T)**, சமர்ப்பித்தல் வேண்டும்.

நி.வை.வ/மு.வ.வ இன் வருடாந்தக் கூற்று மற்றும் அட்டவணைகளைச் சமர்ப்பிக்கும் போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

## 1. நிறுத்திவைத்தல் வரி (WHT) மற்றும் முற்பண வருமான வரி (AIT) என்பவற்றின் கூற்று மற்றும் அட்டவணைகளை சமர்ப்பித்தல்

### i. கோப்பிடுதலுக்கான முறை

**அ) இ – கோப்பிடல்**

2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 113 (1A) ஆம் பிரிவின் பிரகாரம், 2021, ஏப்பிரல் 1 ஆம் திகதி முதல் வருடாந்தக் கூற்றினை இ – கோப்பிடல் (இலத்திரனியல் முறையில் வரி விபரத்திரட்டினைக் கோப்பிடல்) பின்வருவனவற்றுக்கு அத்தியாவசியமானதாகும்.

அ) இலங்கையினுள் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் (அனைத்து வதிவுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்)

ஆ) இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் (அனைத்து வதிவற்ற பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்) மற்றும்

இ) அரச கூட்டுத்தாபனங்கள்

ஆகவே, இத்தகைய உருவகங்கள் இந்த வரிமதிப்பீட்டாண்டிற்கும் இனி வரும் வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும், அச்சிடப்பட்ட குறிப்பிட்ட படிவங்களைப் பயன்படுத்தி எழுத்துமூலம் அவர்களது நிறுத்திவைத்தல் வரி வருடாந்தக் கூற்றினை அனுப்ப உரித்துடையவர்கள் ஆக மாட்டார்கள்.

மேலே குறிப்பிடப்படாத ஏனைய நிறுத்திவைத்தல் முகவர்களும் அவர்களது வருடாந்தக் கூற்றினை இலத்திரனியல் மூலம் அனுப்ப உரித்துடையவர்கள் ஆவர். மேலும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 113 (4) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்துள்ளவாறு, முன்னைய வரிமதிப்பீட்டாண்டுகளில் தங்கள் வருடாந்தக் கூற்றினை இலத்திரனியல் முறையில் ஏற்கனவே கோப்பிட்டோர், தொடர்ந்தும் வருடாந்த கூற்றினை இலத்திரனியல் முறையில் கோப்பிடுதல் வேண்டும்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதள முகப்பின் ஊடாக இ – கோப்பிடலுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதள முகப்பில் (*www.ird.gov.lk)* உள்ள விரைவு வழிகாட்டியை பார்க்கவும்.

**ஆ) கைமுறையாக கோப்பிடல்**

அச்சிடப்பட்ட குறிப்பிட்ட படிவங்களில் தங்களது வருடாந்தக் கூற்றினை சமர்ப்பிக்க விரும்பும் நிறுத்திவைத்தல் முகவர்கள், அவர்களது கூற்றினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தில் உள்ள மத்திய ஆவண முகாமைத்துவ அலகில் (CDMU) அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் எந்தவொரு பிராந்திய அலுவலகத்திலும் சமர்ப்பிக்கலாம்.

**பின்வருவனவற்றில் கவனம் செலுத்தி நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரிக்கான அட்டவணைகளை சமர்ப்பிக்கவும்;**

அ) நி.வை.வ/மு.வ.வ க்கு பொறுப்பான ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை **20 இனை விட அதிகம்** எனில்;

i. **இ – சேவையினூடாக/தரவேற்றம் செய்வதன் ஊடாக உங்கள் அட்டவணைகளை** சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

ii. இ – சேவை வசதி உங்களிடம் இல்லை எனில், உங்கள் அட்டவணைகளின் மென்பிரதியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் அடித்தளத்தில் தாபிக்கப்பட்டுள்ள **"நனசல"** இல் உள்ள இ – சேவையை பயன்படுத்தி நீங்களே சமர்ப்பிக்கலாம் அல்லது ஏதேனும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

iii. தரவேற்றம் செய்யும் செயற்பாட்டில் உங்களுக்கு பரிச்சயமில்லை எனில் ஏற்புடைய அட்டவணைகளின் மென்பிரதியை **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு கொண்டுவந்து "நனசல" இல் உள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் உதவியை பெற்றுக்கொள்ளலாம், அல்லது ஏதேனும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிராந்திய அலுவலகத்திலும் சமர்ப்பிக்கலாம்.**

ஆ) நி.வை.வ/மு.வ.வ க்கு பொறுப்புடைய ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை **20 இற்கு சமனாக அல்லது குறைவாக** இருப்பின் அட்டவணைகளை வன்பிரதியாகவோ அல்லது மென் பிரதியாகவோ சமர்ப்பிப்பதை நீங்கள் தெரிவு செய்யலாம்.

வருடாந்த கூற்றின் வன்பிரதியானது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மத்திய ஆவண முகாமைத்துவ அலகில் **(CDMU)** சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், வருடாந்தக் கூற்றினை தலைமை காரியாலயத்தில் சமர்ப்பிப்பதில் சிரமம் எதுவும் காணப்படின், நீங்கள் உங்கள் வருடாந்தக் கூற்றினை உங்களுக்கு அண்மையிலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய காரியாலயத்தில் சமர்ப்பிக்கலாம், **நீங்கள் உங்கள் வருடாந்தக் கூற்றினை இ – சேவையினூடாக சமர்ப்பித்திருந்தால், அதனை வன்பிரதியாக சமர்ப்பிக்க தேவையில்லை.**

## 2. நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரிக் கூற்றினை பூர்த்தி செய்தல்

### 2.1 பகுதி I – நிறுத்திவைத்தல் வரி (WHT) கழிப்பனவுகளின் சுருக்கம்

இந்த பிரிவின் கீழ் நிறுத்திவைத்தல் வரிக் கழிப்பனவுகளின் விபரங்களை வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

வதிவற்றோரிடமிருந்து கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் விபரங்கள், இந்த பிரிவின் கீழ் **முதல் எட்டு கூடுகளில் (கூடுகள் 1 – 8)** வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். லொத்தர்/ பந்தயம்/ சூதாட்டத்திலிருந்தான வெகுமதிகளிலிருந்து அல்லது வெற்றித் தொகைகளிலிருந்து கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியானது கூடு 9 இல் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் கூடு 10 ஆனது இரத்தினக்கல் ஏல விற்பனையிலிருந்து கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியை வெளிப்படுத்துவதற்கு தேசிய இரத்தினகல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு மாத்திரம் உரித்துடையதாகும்.

### 2.2 பகுதி II - முற்பண வருமான வரி (AIT) கழிப்பனவுகளின் சுருக்கம்

இந்த பிரிவின் கீழ் முற்பண வருமான வரிக் கழிப்பனவுகளின் விபரங்களை வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

நிறுத்திவைக்கப்பட்டவரினால் வழங்கப்பட்ட வெளிப்படுத்துகையின் அடிப்படையில் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரியின் விபரங்கள் இங்கே வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## 2.3 பகுதி III – மாதாந்தக் கொடுப்பனவின் சுருக்கம்

இந்த பிரிவில், கொடுப்பனவு குறியீடுகள் 43 மற்றும் 44 இன் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உங்களால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு/கொடுப்பனவுகளின் விபரங்களுடன் நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரியின் உங்கள் மாதாந்த பொறுப்பினை வெவ்வேறாக வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

உங்கள் விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் கீழ்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

i. விபரத்திரட்டின் கூடு IA (d) + IIA (d) = விபரத்திரட்டின் கூடு IIIA (f)
ii. விபரத்திரட்டின் கூடு III (a) + கூடு III (c) = அட்டவணை 1 (கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு)
iii. விபரத்திரட்டின் கூடு III (b) + கூடு III (d) + கூடு III (e) = அட்டவணை 2A (கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு) + அட்டவணை 2B (கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு)

## 2.4 பகுதி IV - வெளிப்படுத்துகை

**பகுதி (A)**

கூற்று அல்லது கூற்றின் ஒரு பகுதியானது அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரினால், அல்லது வரிசெலுத்துநரின் முழுநேர ஊழியர் தவிர்ந்த கொடுப்பனவுக்காக பிறிதொரு நபரினால் தயாரிக்கப்பட்டிருப்பின் பகுதி (A) இனைப் பூரணப்படுத்தி, அத்தகைய நபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்/களை இணைக்கவும்.

**பகுதி (B) நிறுத்திவைத்தல் முகவரின் வெளிப்படுத்துகை**

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 126(4 ) ஆம் பிரிவின் பிரகாரம், வரிசெலுத்துநர் அல்லது வரி செலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், கூற்றின் துல்லியம் மற்றும் பூரணத்துவம் தொடர்பில் சான்றுப்படுத்தி அதில் கையொப்பமிடல் வேண்டும். ஆகவே, முகாமைத்துவ பணிப்பாளர்/ திணைக்களத் தலைவர்/ தலைவர் அல்லது செயற்பாட்டு பங்காளர்/ நிதிப் பணிப்பாளர்/ பணிப்பாளர்/ செயலாளர்/ நம்பிக்கைப் பொறுப்பாளர்/ கணக்காளர்/ நிருவாக உத்தியோகத்தர்/ பிரதான உத்தியோகத்தர்/முறையாக அதிகாரமளிக்கப்பட்டவர், வருடாந்தக் கூற்றின் பகுதி IV இன் பகுதி (B) இன் கீழ் அவரது பெயர் மற்றும் பதவி பெயர் என்பவற்றை குறிப்பிட்டு வருடாந்தக் கூற்றில் கையொப்பமிடல் (மற்றும் திகதியிடல்) வேண்டும்.

## 3. நிறுத்திவைத்தல் வரி அட்டவணைகளை பூரணப்படுத்துதல்

### 3.1 நிறுத்திவைத்தல் வரி அட்டவணை 1 (வதிவுள்ள ஆட்களுக்கான வட்டி அல்லது தள்ளுபடி மீதான நிறுத்திவைத்தல் வரி

இந்த அட்டவணை வட்டி அல்லது தள்ளுபடி கொடுப்பனவு மீது நி.வை.வ/மு.வ.வ கழித்த ஆளினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

1. *தொடர் இல.* – தொடர் இலக்கம் 1 இலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரே இலக்கம் எச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் பாவிக்கப்படுதல் கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புப் பதிவு தயாரிக்கப்படின் (போதுமான கொள்ளளவு இல்லாவிடின் (அதாவது கோப்பின் கொள்ளளவு(capacity) 10 MB இனை விட அதிகமாயின்)), அடுத்த பதிவானது தொடர் இலக்கங்களின் சரியான தொடர்ச்சியை கொண்டிருத்தல் வேண்டும்.
2. *முதலீட்டு வகை* – கீழே தரப்பட்ட நிரலில் இருந்து ஏற்புடைய முதலீட்டு வகையினை தெரிவு செய்யவும்.

    வியாபாரக் கடன்
    வைப்புச் சான்றிதழ்
    வணிக பத்திரங்கள்/வாக்குறுதிப் பத்திரங்கள்
    தொகுதிக்கடன்
    நிலையான வைப்பு
    வெளிநாட்டு நாணய கணக்கு
    நிதியங்களில் முதலீடு
    வதிவற்ற வெளிநாட்டு நாணயம்
    ஏனையவை
    சேமிப்புகள்
    திறைசேரி முறிகள்/உண்டியல்கள்/பிணைபொறுப்புகள்

3. *நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்* – நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர் **ஆங்கிலத்தில்** குறிப்பிடப்படுதல் வேண்டும். அதிகபட்ச சொற்கள் 100 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. *நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி* – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அரைக்கால் புள்ளிகள், எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தல் கூடாது, அதற்கு பதிலாக, இரண்டு சொற்களுக்கிடையில் இடைவெளி விடவும். அதிகபட்ச சொற்கள் 100 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
5. *நிறுத்திவைக்கப்பட்டவரின் வ.அ.இ.* (TIN) – நிறுத்திவைக்கப்பட்டவரின் செல்லுபடியாகும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்டவர் வ.அ.இலக்கத்தை குறிப்பிடவில்லை எனில் இக்கூட்டினை வெறுமையாக விடுங்கள்.

6. *கணக்கு இல./சான்றிதழ் இல.* – கணக்கு இலக்கம் அல்லது சான்றிதழ் இலக்கத்தை குறிப்பிடவும். அத்தகைய இலக்கம் 30 இலக்கங்களை விஞ்சுதல் ஆகாது. .
7. *முதலீட்டின் பெறுமதி (ரூபா)* – இந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வட்டி செலுத்தப்படும் முதலீட்டின் முக மதிப்பை குறிப்பிடவும். இக் கூடு அதிகபட்சம் 15 இலக்கங்களை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும். (2 தசமங்கள் அடங்கலாக).
8. *செலுத்தப்பட்ட வட்டி/தள்ளுபடியின் பெறுமதி (ரூபா)* – இந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட வட்டியின் பெறுமதி இங்கே உள்ளடக்கப்படுதல் வேண்டும். வட்டி காலத்திற்கு காலம் செலுத்தப்பட்டிருப்பின், ஒவ்வொரு காலப்பகுதிக்கும் செலுத்தப்பட்ட வட்டி தனித்தனியாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் 15 இலக்கங்களை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும் (2 தசமங்கள் அடங்கலாக).
9. *நி.வை.வ வீதம்(%)* – நிறுத்திவைத்தல் வரி கழிப்பதில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.
10. *கழிக்கப்பட்ட நி.வை.வரித் தொகை (ரூபா)* – கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் 15 இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். (2 தசமங்கள் அடங்கலாக).
11. *கொடுப்பனவு கழிக்கப்பட்ட மாதம்* – கீழ் இறங்கும் நிரலில் (dropdown list) இருந்து ஏற்புடைய மாதத்தை தெரிவு செய்யவும்.
12. *நி.வை.வ சான்றிதழ் இலக்கம்* – நிறுத்திவைக்கப்பட்டிருப்பவருக்கு உங்களால் வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி சான்றிதழின் இலக்கம்/களை இங்கே குறிப்பிடவும். இந்த கூடு அதிகூடியதாக 30 இலக்கங்களை மாத்திரமே கொண்டிருத்தல் வேண்டும்.
    நிறுத்திவைக்கப்பட்டவருக்கு நி.வை.வ சான்றிதழை நீங்கள் வழங்கவில்லை எனில், இக் கூடு வெறுமையாக இருத்தல் வேண்டும்.
13. *மொத்தம்* – நிரல் 10 இன் கூட்டுத் தொகை இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**3.2 நிறுத்திவைத்தல் வரி அட்டவணைகள் 2A மற்றும் 2B**

வதிவுள்ளவர்கள் மற்றும் வதிவற்றவர்கள் மீதான வட்டி, தள்ளுபடி தவிர்ந்த 84 மற்றும் 85 ஆம் பிரிவுகளின் கீழ் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியானது முறையே **2A** மற்றும **2B** ஆம் அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்

2A ஆனது வதிவுள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையது

2B ஆனது வதிவற்றவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையது

1. *தொடர் இல.* – தொடர் இலக்கம் 1 இலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரே இலக்கம் எச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் பாவிக்கப்படுதல் கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட கோப்பு பதிவு தயாரிக்கப்படின் (போதுமான கொள்ளளவு இல்லாவிடின் (அதாவது கோப்பின் கொள்ளளவு 10 MB இனை விட அதிகமாயின்)), அடுத்த பதிவானது தொடர் இலக்கங்களின் சரியான தொடர்ச்சியை கொண்டிருத்தல் வேண்டும்.
2. *கொடுப்பனவு வகை* – கீழே தரப்பட்ட நிரலில் இருந்து ஏற்புடைய கொடுப்பனவு வகையினை தெரிவு செய்யவும்.

    விதிப்பனவு
    தரகு
    ஆலோசனைகள்
    பங்கிலாபம்
    இரத்தினக்கல் ஏலம்
    வதிவற்றவர்களுக்கு தரை, கடல் அல்லது ஆகாய வழி போக்குவரத்து அல்லது தொலை தொடர்பு சேவைக்கான கொடுப்பனவு
    முகாமைத்துவ சேவை கட்டணம்
    இயற்கை வள கொடுப்பனவு
    ஏனையவை
    காப்புறுதி கட்டுப்பணங்கள்
    வாடகை
    அரசுரிமைப் பணம்
    சேவைக் கட்டணம்
    கற்பித்தல் அல்லது விரிவுரையாற்றல்
    தொழில்நுட்ப கட்டணம்
    ஏனைய தானியங்கு சேவை அடிப்படையில் வழங்கப்பட்ட எந்தவொரு சேவை மீதான கொடுப்பனவு
    லொத்தர்/வெகுமதி/பந்தயம் அல்லது சூதாட்டத்திலிருந்தான வெற்றித் தொகைகள்

3. *நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்* – நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர் **ஆங்கிலத்தில்** குறிப்பிடப்படுதல் வேண்டும். அதிகபட்ச சொற்கள் 100 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. (*அ*).*நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி* – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அரைக்கால் புள்ளிகள், எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தல் கூடாது, அதற்கு பதிலாக, இரண்டு சொற்களுக்கிடையில் இடைவெளி விடவும். அதிகபட்ச சொற்கள் 100 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ).*நிறுத்திவைக்கப்பட்டவரின் நாடு* (அட்டவணை 2B விற்குரியது) – நிறுத்திவைக்கப்பட்டவரின் வதிவிட நாட்டை உள்ளடக்கவும்

5. *நிறுத்திவைக்கப்பட்டவரின் வ.அ.இ. / தே.அ.இ.* – நிறுத்திவைக்கப்பட்டவரின் செல்லுபடியாகும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அல்லது தேசிய அடையாள இலக்கத்தை குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்டவர் வ.அ.இ. அல்லது தே.அ.இலக்கத்தை குறிப்பிடவில்லை எனில் இக்கூட்டினை வெறுமையாக விடுங்கள்.

6. *ஒரு மாதத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கை* – ஆள் ஒருவருக்கு ஒரு மாதத்தினுள் பல கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் ஒரு நிறுத்திவைத்தல் வரி சான்றிதழ் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அச் சான்றிதழில் எத்தனை முறை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் குறிப்பிடவும்.

7. *செலுத்தப்பட்ட மொத்த தொகை* – நிறுத்திவைக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட வரி சான்றிதழுக்கு/சான்றிதழ்களுக்கு அமைவாக கொடுப்பனவு செய்யப்பட்ட (வரி அடங்கலாக) மொத்த பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் 15 இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். (2 தசமங்கள் அடங்கலாக).

8. *நி.வை.வ வீதம் (%)* – நிறுத்திவைத்தல் வரி கணிப்பதில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9. *கழிக்கப்பட்ட நி.வை.வரித் தொகை (ரூபா)* – கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் 15 இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். (2 தசமங்கள் அடங்கலாக).

10. *கொடுப்பனவு கழிக்கப்பட்ட மாதம்* – கீழ் இறங்கும் நிரலில் (dropdown list) இருந்து ஏற்புடைய மாதத்தை தெரிவு செய்யவும்.

11. *நி.வை.வ சான்றிதழ் இலக்கம்* – நிறுத்திவைக்கப்பட்டிருப்பவருக்கு உங்களால் வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி சான்றிதழின் இலக்கம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த கூடு அதிகூடியதாக 30 இலக்கங்களை மாத்திரமே கொண்டிருத்தல் வேண்டும்.

நிறுத்திவைக்கப்பட்டவருக்கு நி.வை.வ சான்றிதழை நீங்கள் வழங்கவில்லை எனில், இக் கூடு வெறுமையாக இருத்தல் வேண்டும்.

12. *மொத்தம்* – நிரல் 9 இன் கூட்டுத் தொகை இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கீழ்வரும் பிரச்சனைகளை நீங்கள் எதிர்நோக்கின்;

- **முறைமை செயலிழப்பு (System failure) :** 1944 என்ற இலக்கத்தை அழைத்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உதவியை பெற்றுக் கொள்ளலாம் அல்லது, குரல் பதிவு ஒன்றை பதிவு செய்து சிட்டை இலக்கத்தை பெற்றுக்கொள்ளவும்.
- **தரவேற்ற பிழைகள்:** 0112134162 அல்லது 011-2134133 இலக்கத்தை அழைத்து மத்திய ஆவண முகாமைத்துவ அலகுடன் (CDMU) தொடர்பு கொள்ளவும்.
- **அட்டவணை சரிபார்ப்பு (Schedule verification) தொடர்பிலான பிரச்சனைகள்:** 0112134162 அல்லது 011-2134133 இலக்கத்தை அழைத்து மத்திய ஆவண முகாமைத்துவ அலகுடன் (CDMU) தொடர்பு கொள்ளவும்.
- **இ – கோப்பிடல் தொடர்பிலான பிரச்சனைகள்:** 011-2134098/011-2135242/011-2134222 என்ற இலக்கங்களை அழைக்கவும்